2003 ஏப்ரல் 21]

பணியாற்றக்கூடிய பெண் ஊழியர்கள் ஒதுங்குவதற்கான கழிவறைகள் போன்ற வசதிகளெல்லாம் காணப்படவில்லை. ஆகவே அந்த ஊழியர்களுடைய நலனை முன்னிட்டு, அவர்களுக்கான இருப்பிட வசதிகளை உத்தரவாதப்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அரசினுடைய குறிப்பில், எதிர்காலத்திலே திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா? அடுத்ததாக, அந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கான குறிப்பு ஏதாவது இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமையைக் கருத்திலேகொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் ஆயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 274, திரு. ப. அண்ணாவி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

274—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

•15893—திரு. ப. அண்ணாவி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை முசிறிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. அண்ணாவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர்

[2003 ஏப்ரல் 21

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10-3-2003 அன்று, திருச்சி மாவட்டத்திற்கு வருகை தந்தார்கள். ஏழையெளிய, நடுத்தர மக்களுக்கு 209 கோடி ரூபாய்க்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு திருச்சி மாவட்டம் மக்கள் சார்பாக நன்றியினை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு திருச்சி தாலுகா, தொட்டியம் தாலுகா, துறையூர் தாலுகா, ஆகிய தாலுகாக்களிலுள்ள வாகனங்களைப் பதிவு செய்வதற்கும், ஓட்டுநர் உரிமம், நடத்துனர் உரிமம் மற்றும் உரிமம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கு சுமார் 50 கி.மீ. தொலைவிலுள்ள, திருச்சி டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வரவேண்டியுள்ளது. ஏற்கெனவே திருச்சி மாநகரில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இருப்பதால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மறுபரிசீலனை செய்து டோல்கேட்டிலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை மேலே குறிப்பிட்டுள்ள மூன்று தாலுகாக்களின் ,மையமான முசிறிக்கு மாற்றித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தற்போது இயங்கி வரும் திருச்சிராப்பள்ளி மாநகரத்திலிருந்து முசிறிக்கு சுமார் 35 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இதனால் இங்கிருந்து இடமாற்றம் செய்வதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும்கூட இப்போது இயங்கி வருகின்ற அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் பழுதடைந்த நிலையில் இருப்பதால், பழமையானதாகி இருப்பதால் சற்று, அதனை மாற்றி தற்போது திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தை இப்போது தேர்வு செய்துள்ளோம். ஆகவே மாநகராட்சி ஒப்புதலைப் பெற்றவுடன் மிக விரைவிலே—அந்த ஆர்.டி.ஓ. அலுவலகம்—வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் திருச்சி மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது என்பதைத்

2003 ஏப்ரல் 21]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முசிறியிலே மீண்டும் கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே திருச்சியிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருகிறது. அதற்கு அடுத்தபடியாக, 1999 ஆம் ஆண்டு முதல் பகுதி அலுவலகமாக இருந்த ஸ்ரீரங்கத்தை இப்போது, வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தகுதி உயர்த்தி, ஸ்ரீரங்கத்திலும் ஒரு தனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் நடைபெற்று வருகிறது. ஆகவே திருச்சி மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இப்போது இயங்கி வருகின்றன. எனவே மூன்றாவது அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 275, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

275—

அகல இரயில் பாதை

***23944—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகரிலிருந்து சத்தியமங்கலம், கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு அகல இரயில் பாதை அமைப்பதற்கு மைய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பெங்களூர்-சத்தியமங்கலம் புதிய அகல இரயில் பாதை மற்றும் மேட்டுப்பாளையம் வரை நீட்டிக்கப்பட்ட மைசூர்-சாம்ராஜ் நகர் அகல இரயில் பாதை மாற்றம் ஆகியவை, ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களில், சாம்ராஜ் நகர், சத்தியமங்கலம் பிரிவும் அடங்கும். இவை தவிர, சத்தியமங்கலத்திலிருந்து கோபிசெட்டிப்பாளையம், காங்கேயம், தாராபுரம் வழியாக பழனி